1979 மார்ச் 15]

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலேயே வட ஆற்காடு மாவட்டத்திற்கு அடுத்தபடியாக தென்னாற்காடு மாவட்டத்தில் தான் மணிலா அதிகமாகக் கொள்முதல் செய்யப்படுகிறது. குறிப்பாக, கள்ளக்குறிச்சியில் மட்டும் ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் மூட்டைகள் மணிலா கொள்முதல் செய்யப்படுகிறது, எனவே, அங்கு மணிலா சுத்திகரிப்பு ஆலை துவங்க செயற்குறிப்பு இல்லையென்று அதிகாரிகள் சொன்ன காரணங்கள் யாவை. அப்படியே அதிகாரிகள் சொன்னாலும் பொதுமக்கள் பிரதிநிதிகளாக இருக்கிற நாங்கள் சொல்கிறோம் வேண்டுமென்று; ஆகவே, அங்கு சுத்திகரிப்பு ஆலை துவங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலம் என்னுமிடத்தில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகத்தினால் (Tamil Nadu Co-operative Marketing Federation) ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவப்பட்டுள்ளதாலும், மணிலா எண்ணெய் சுத்திகரிப்பு மத்திய அரசினால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாலும், மேலும் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தென்னாற்காடு மாவட்டத்தில் ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

கூவனூற்று கிராமத்தில் குட்டை அமைப்புத் திட்டம்

*வினா எண் 414— திரு. மெ. ஆண்டி அம்பலம் ; மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாவட்டம், கூவனூற்று கிராமம் நொச்சியாற்றின் குறுக்கே பொதுப்பணித் துறையால் மதிப்பீடு தயார் செய்யப் பட்டு நிறைவேற்றப்படாமல் உள்ள குட்டைத் திட்டத்தை நிறைவேற்ற அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இது ஒரு சிக்கன மற்ற திட்டமானதாலும், 1978-79ஆம் ஆண்டில் இதனை எடுத்துக் கொள்வதற்கு வருவாய் வாரியத்தின் ஒத்திசைவு இல்லையாதலாலும் இத்திட்டம் இவ்வாண்டு எடுத்துக்கொள்ளப் படவில்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவரவர்களே, சாணார் பட்டி ஒன்றியம் ஏமக்கலாபுரம் கிராமத்தில் சர்வே நெம்பர் 550-ல் ஒரு குட்டைத்திட்டம் போட ஆய்விலுள்ளது. எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்? இவ்வேலைக்கு நஷ்டக்கணக்கு வருமானால் நில உரிமையாளர்கள் தங்கள் நிலத்தை அதற்குத்

தேவைப்படும் அளவிற்கு இனாமாக அரசுக்குக் கொடுக்க முன் வருகிறார்கள். இந்த வேலை ஆரம்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாவட்டம், கூவனூற்று கிராமம் நொச்சியாற்றின் குறுக்கே ஒரு குட்டையை அமைக்க பொதுப்பணித் துறையால் ஒரு திட்டம் போடப்பட்டது. அதற்காக தற்போதைய விலை வீதப்படி மதிப்பீடு ரூ. 1.01 இலட்சம் ஆகும். இத்திட்டத்தினால் 106.60 ஏக்கர் நிலம் பயன்பெறும். கூடுதல் உணவு உற்பத்தி 26.71 டன் என எதிர்பார்க்கப்படுகிறது. 1978-79ல் இத்திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கான ஒத்திசைவை வருவாய் வாரியம் கொடுக்கவில்லை. ஆனாலும் இவ்வரசு மீண்டும் பரிசீலித்து வருகிறது.

குமரி அணை.

*வினா எண் 415—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குமரி மாவட்டத்தில் சுசீந்திரம், தேரூர் ஆகிய பகுதிகளில் பாசனத்திற்காகக் கட்டப்பட்ட குமரி அணை பழுதடைந்து செப்பனிடப்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குமரி அணை 1970-ல் ஏற்பட்ட அதிக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. அதனுடைய ஆயக்கட்டு நிலங்கள் பாதிக்கப்படாதவாறு தாற்காலிக வளைகரைகள் அமைக்கப்பட்டு பாசனம் பாதிக்காமல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) குமரி அணையை செப்பனிடுவதற்கு ரூ. 12.57 இலட்சத்திற்கு மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் நீர் வளம் அதிகமாக இருக்கிற காரணத்தினால், வேளாண்மைக்குப் பயன்படுத்துகிற நீர் போக எஞ்சிய நீர் கடலிலே வீணாக கலக்கின்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் அங்கே இருக்கிற அத்தனை அணைக்கட்டுகளும் தகுந்த அளவில் பராமரிக்கப்படுவதால் தண்ணீரை உரிய முறையிலே